# **In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.163/2019                                        தேதி-25.02.2025

(P.W.1) - ராபின்சன்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. இவ்வழக்கின் பிரதிவாதிகள் எதிர்வழக்குரை 2020-ல் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் நினைவில்லை. மேற்சொன்ன எதிர்வழக்குரையில் பிரதிவாதிகள் வழக்கு பி-பட்டிகை சொத்து விலையாவணம் மூலம் கிடைக்கப்பெற்றது என்றும் அதற்கான ரசீதை தாக்கல் செய்துள்ளார்  என்ற விவரம் உள்ளது என்றால் நினைவில்லை.மேற்சொன்ன விலையாவணத்திற்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட ஆவணமான 1972 மற்றும் 1961-ல் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் சம்மந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் பி-பட்டிகை சொத்து கைவசத்தில் உள்ளது என்று காண்பிப்பதற்காக மேற்சொன்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன வழக்கு பி-பட்டிகை சொத்தை உரிமையாளர் மற்றும் அதன் சுவாதீனம் பற்றி பிரதிவாதிகள் தரப்பு கேள்வி எழுப்பிய பிறகு வாதுரையை திருத்தம் செய்ய மனு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. மேற்சொன்ன திருத்தம் செய்ய மனு ஏதும் தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பொய்யான வழக்கு தாக்கல் செய்து பிரதிவாதிக்கு நான் கஷ்டம் ஏற்படுத்தியதாக நஷ்ட ஈடாக ரூபாய் 1 லட்சம் தரவேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.